# திருவையாறும் அதன் நிலவியல் பண்பாடும்

***முனைவர் கு. செல்வி***
பேராசிரியர், தமிழ்த்துறை
டாக்டர் என். ஜி. பி. கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்
https://doi.org/10.5281/zenodo.14383277

*மனிதன் அறிவின் படிநிலை வளர்ச்சியில் முதலில் நிலத்தையும், காலத்தையும் பகுத்தான். தொல்காப்பியர் இதனை,*

***முதல் எனப்படுவது நிலம் பொழுது இரண்டின்***
***இயல்பென மொழிப இயல்புணர்ந் தோரே***
***(தொல்காப்பியம். பொருளதிகாரம் நூ.4)***

*என்கிறார்.*

*குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று நிலத்தைப் பகுத்ததோடு தெய்வம் முதலாக பறவை, விலங்கு, முதலியவைகளுடன் இசை, இசைக்கருவிகள் பண், மரம், தொழில் போன்ற பன்னிரண்டு வகையாகப் பகுத்து அதற்குக் கருப்பொருள் என்று பெயரிட்டார் தொல்காப்பியர். முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் எனும் முப்பகுப்புகளும் அதன் அமைப்பு சார்ந்து வகுக்கப் பட்டது.*

*மூன்றாவதாக, அமைந்துள்ள "உரிப் பொருள்" என்பது மக்களின் அகப்பொருள் வாழ்வு குறித்தது. இப்படித்தான் வாழ வேண்டும் என்கின்ற நெறியினை வகுத்து வாழ்ந்து வந்தார்கள் என்பதே தொல்காப்பியம் கூறும் இலக்கணம்.*

*சங்க மக்களின் வாழ்க்கைப்பதிவுகள் சங்க இலக்கியங்கள். அறம் தலை நின்ற வாழ்க்கையை பார்க்கிறோம். வயல்கள் நிறைந்தது மருத நிலம். வளம் மிக்க மக்களின் வாழ்க்கை. சில நெறி பிறழ்ந்த செயல்களும் சுட்டப்படுகின்றன. குறிப்பாக, தலைவன் தலைவியின் இல்லறம் பெருமை மிக்கதாக இல்லை என்பதை மருத நிலப் பாடல்கள் வழி அறிகிறோம்.*

*தலைவனே, நீ செய்வது தவறு என்று சுட்டிக் காட்டுகின்ற உரிமை தலைவிக்கும் தோழிக்கும் மட்டுமே இருந்துள்ளது. கண்டோர் கூற்று எனும் போது பொதுவான அறிவுரைகளைப் பார்க்க முடிகின்றது. உலகின் இயல்பை அவர்கள் எடுத்துரைக்கிறார்கள். காலத்தின் வளர்ச்சியிலும், மாற்றத்திலும் சமூகத்தில் வாழ்க்கை முறையிலும் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஆயினும் அவை இல்லற மாண்பை சிதைக்கவில்லை என்பது இலக்கியங்கள் வழி அறியலாகும் உண்மை.*

*பல்வேறு ஆளுமைகள், அவர்கள் கொண்டு வந்த பழக்கங்கள், மக்களால் கடைபிடிக்கப்பட்டு வந்துள்ளன. சமயங்கள் வளர்ந்த காலம் என்று சுட்டப்படுகின்ற பக்தி இலக்கிய காலத்தில் பல்வேறு சமயங்கள் ஆளுமையில் இருந்த போதும் சைவ, வைணவ, சமண, பௌத்த சமயங்கள் மிக நீண்ட காலம் மக்களை ஆட்சி செய்தன என்பதும் அந்தந்த இலக்கியங்கள் தரும் பதிவுகளாக அமைகின்றன.*

*இக்கட்டுரையின் நோக்கம், சைவ சமயத்தில் மூவர் பாடிய திருவையாறு தலமும் அதன் நிலவியல் சூழல், மக்களின் பழக்கவழக்கங்கள், இல்லற மாண்பு, இறை வழிபாடு ஆகியவைகளை விளக்குகிற விளக்கமுறை ஆய்வாக இக்கட்டுரை அமைய உள்ளது.*

*முதலில் திருவையாற்றின் நில அமைப்பு பற்றிச் சொல்லும் போது, ஐந்து ஆறுகள் சுற்றிலும் ஓடி வளம் சேர்க்கும் வயல்கள் நிறைந்த பகுதி. அகன்ற நிலப்பரப்பைக் கொண்டது. காவிரிப்பூம்பட்டினத்தில் ஒரு பகுதியில் அமைந்து வளம் பல சேர்க்கும்*

நில அமைப்பு. காவிரியின் வடகரையில் அமைந்துள்ளது இவ்வூர். கோவலன், கண்ணகி இருவரும் மதுரை செல்ல காவிரியின் வடகரையில் அமைந்துள்ள இவ்வழியில்தான் சென்றார்கள். அவ்வாறு செல்லும்போது, வேதியர்கள் வேள்வி செய்யும் புகை வானனுயறச் சென்றது என்கிறார் இளங்கோவடிகள்,

***மழைக்கரு உயிர்க்கும் அழல் நிகழ் அட்டில்***
***மறையோர் ஆக்கிய ஆவூதி நறும்புகை***
***இறை உயர் மாடம் எங்கனும் பூத்து..***

***(சிலப்பதிகாரம். நாடுகாண் காதை 145 - 147)***

என்கின்றார்.

திருவையாறு நீர் வளம் நிலவளம் நிறைந்த பகுதி. இதே போல இம்மண்ணில் கால்பதிக்கும் போதே மனதில் அமைதியும் நல்லுணர்வும் ஏற்படுவதை உணர முடியும். வெண்ணாறு, வெட்டாறு, குடமுருட்டி, காவிரி, கொள்ளிடம் இந்த ஐந்து ஆறுகளும் சுற்றிலும் ஓடுவதால் அய்யாறு எனும் பெயர் வந்தது என்கின்றனர்.

***"நல்லாறும் பழையாறும் கோட்டாற் றொடு***
***நலந்திகழும் நாலாறும் திருவையாறும் தெள்ளாறும்......***

***(6 ஆம் திருமுறை 71 ஆம் பதிகம் 10 ஆம் பாடல்)***

என்பது நாவுக்கரசர் கூறும் பாடல் வரிகள். ஐயாறு எனும் சொல்லுக்கு அகன்ற ஆற்றை உடைய ஊர் என்ற தெளிபொருளும் உண்டு. சைவத்தலமாக தலம் விளங்குகிறது என்பதற்கு மாணிக்கவாசகர் தரும் வரியே சான்று.

***"ஐயாறதனில் சைவனாகியும்"***

***(திருவாசகம் - கீர்த்தித்திரு அகவல் வரி. 85)***

அருணகிரிநாதரும் இவ் ஐயாறு குறித்து பாடுகிறார்.

மனித வாழ்வில் நிலங்களே சில நற்பண்புகளை உண்டாக்குகின்றன என்பதை ஔவையார்

***நாடாகொன்றோ காடாகொன்றோ***
***அவளாகுன்றோம் இசையாகுன்றோம்***
***எவ்வழி நல்லவர் ஆடவர்***
***அவ்வழி நல்லை வாழிய நலனே***

***(புறநானூறு பா. 187)***

என்கிறார்.

மேலும் பின்பு வந்த திருவள்ளுவரும் நிலம் என்னும் நல்லாள் என்றும்,

***"நிலத்தியல்பால் நீர் திரிந்தற்றாகும் மாந்தர்க்கு***
***இனத்தியல் பதாகும் அறிவு"***

***(திருக்குறள். 452)***

மூவரால் பாடப்பட்ட சிறப்புடைய திருவையாறு பற்றி கூறும்போது, ஞானசம்பந்தர் மனிதனை நல்வழிப்படுத்தி கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ள வேண்டிய ஐம்புலன்களும் தங்கள் கடமை கெட்டு வழி தவறி அறிவிழந்து செய்யும் தவறால் வருந்துகின்ற காலத்தில் வந்து அருள் புரிபவன் ஐயாறப்பர் என்று கூறுகிறார்.

***"புலனைந்தும் பொறி கலங்கி நெறி மயங்கி***
***அறிவழிந்து இட்டை மேழுந்தி***

***(தேவாரம். முதல் திருமுறை 130 ஆம் பதிகம்)***

என்று பாடுவதை பார்க்கின்றோம். மனிதனின் வாழ்க்கை முறையினை பிற உயிரினங்களோடு பொருத்தி திருநாவுக்கரசர் பாடும்போது வளம் மிக்க இடங்களில் உள்ள அனைத்து விலங்குகளும் எவ்வாறு இல்லற மாண்பு மாறாமல் உள்ளன என்பதை இப்பாடல்களில் மிகச் சிறப்பாக எடுத்துக் கூறுகிறார்.

மக்களின் பண்பாடு பற்றிக் கூறும் போது, இறைவனை வணங்கச் செல்லும் போது, ஒருவர் பின் ஒருவராகச் செல்கிறார்கள். எந்த விதமான சத்தமும் இல்லை. மிகவும் அமைதியான முறையில் கோவிலுக்குள் செல்கிறார்கள். அதே போல பூவும், நீரும் கொண்டு செல்கிறார்கள்.

***மாதர் பிறைக் கண்ணியானை மலையான் மகளோடும் பாடி***
***போதொடு நீர் சுமந்தேத்தி புகுவார் அவர் பின் புகுவேன்***
***யாதும் சுவடு படாமல் ஐயாற டைகின்ற போது காதல்***
***மடப்பிடியோடும் களிறு வருவன கண்டேன்***
***கண்டேன் அவன்திருப் கண்டறியாதன கண்டேன்.***

***(தேவாரம். நான்காம் திருமுறை பதிகம் - 3)***

என்று திருநாவுக்கரசர் கூறுகின்றார்.

*திருஞானசம்பந்தர் கூறும் போதும்,*

***......***
***சலம் பூவோடு தூபம் மறந்தறியேன் ...***

***(தேவாரம். நான்காம் திருமுறை பதிகம் - 2 பாடல் - 6)***

என்கின்றார்.

*சங்க மக்கள் நெல்லும், மலரும் தூவி இறைவனை வழிபட்டனர். நெல் என்பது உணவு மட்டும் அல்ல. வளர்ச்சிக்குரிய குறியீட்டுப்பொருள். இதெல்லாம் வழிபாடு என்கின்ற நிலையில் அறிந்து கொள்ளும் பண்பாடு.*

*ஐயாறில் உள்ள விலங்குகள் அனைத்தும் ஆண், பெண் இணை பிரியாமல் உள்ளன. யானை கோழி, குயில், மயில், ஏனம் நாரை, கிளி', ஏறு, போன்ற விலங்குகள் தன் இணையோடு வந்து பசியாறும் காட்சியை வழி நெடுகிலும் கண்டதாகக் காட்டுகிறார் திருநாவுக்கரசர்.*

*கரிகாற் பெருவளத்தான் என்கின்ற சோழ மன்னனால் கட்டப்பட்டது இப்பெருங்கோயில் இங்குள்ள இறைவன் சுயம்புவாகத் தோன்றியவர். தான் வரும் பாதையில் மேற்செல்ல விடாது ஏதோ தடுக்கிறது என்று நிலத்தில் நின்று உற்று நோக்கிய போது அங்கு இறைவன் திருவுருவங்கள் இருப்பது கண்டு அதே இடத்தில் சிறப்பு மிக்க கோயிலைக் கட்டுகிறான் கரிகாலன். தல விருட்சம் வில்வ மரம்.*

*இங்கு எழுந்தருளியுள்ள இறைவி அறம் வளர்த்த நாயகி. இங்கு நடைபெறும் விழாக்களுள் சிறப்பு மிக்கது படி நெல் விழா. இறைவி தானியங்கள் மக்களுக்கு வேண்டும் என்று சொல்ல இறைவன் இரண்டு நெல் கொடுத்து விளைவிக்க! என்கிறார் .அந்த நிகழ்வைச் சுட்டும் விழா இது.*

*அபிராமிப் பட்டர் தமது அபிராமி அந்தாதியிலும் இதனைக் குறிப்பிடுகிறார்,*

***ஐயன் அளந்தபடி இருநாழி கொண்டு இவ்வண்டமெல்லாம்***
***உய்ய அறம் செய்யும் உன்னையும் போற்றி ஒருவர் தம்பால்***
***செய்ய பசுந் தமிழ்ப் பாமாலையும் கொண்டு செ ன்று பொய்யும்***
***மெய்யும் இயம்ப வைத்தாய் இதுவோ உன்றன் மெய்யருளே***

***(அபிராமி அந்தாதி பா.57)***

*என்கின்றார். முப்பத்து இரண்டு அறங்களையும் அனைத்து மக்களுக்கும் செய்பவள் இறைவி. தர்மாம்பிகை என்ற திருப்பெயரும் உண்டு.*

*அது போல சுற்றிலும் உள்ள ஏழு ஊர்களுக்கும் சேர்ந்து திருவிழா நடத்தப் படுகிறது. இது "சப்தஸ்தானம்" என்று அழைக்கப் படுகின்றது.*

*இது போன்று விழாக்கள் ஏராளம் உள்ளன. கோயில் அமைப்பு, சிற்பம் என்று ஒவ்வொன்றும் சிறப்பு. கரிகாலன் முதலாக பின் வந்த அத்தனை பேரும் திருப்பணிகளை முன்னெடுத்துச் செய்து உள்ளார்கள் என்பது குறிப்பிடத் தக்கது. நிறைய அருட் செயல்களும் நிகழ்ந்திருக்கின்றன.*

1. *இறைவழிபாடு மக்கள் வாழ்க்கையில் நல்ல பண்புகளை வளர்த்திருக்கிறது.*
2. *வயல் கள் விளைந்து செழுமை இருந்த போது கலைகளில் கவனத்தைச் செலுத்தினர்.*
3. *தியாகராஜர் போன்றவர்களும் இன்னும் பலரும் விழாக் காண அடிப்படை இதுவே.*
4. *மக்களின் வாழ்கையில் செல்வம் நிறைந்திருப்பினும் அதனை பிறருக்குக் கொடுத்து இன்பம் காண்பதே இன்பம் என்று வாழ்கின்றனர்.*
5. *இல்லறம் நல்லறம் பெற அங்குள்ள நிலவியல் சூழல் சிறப்புப் பெற்றது.*
6. *கயிலைக் காட்சி காண கடுமையாக உடலை வருத்திச் சென்ற நாவுக்கரசரை ஐயாறில் காண்க என்ற பதம் சிந்திக்க வைக்கிறது.*
7. *முன் ஆய்வுகள் பல இருந்தாலும் கால மாற்றத்தில் மக்கள் பண்பாடு பற்றி அறிதல் நலம்பயக்கும்.*

# மதுரைக்காஞ்சி புலப்படுத்தும் ஐந்நில மக்களின் தொழில்கள்

*செல்வி து. கீர்த்தனா*
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
டாக்டர். என் ஜி பி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்
https://doi.org/10.5281/zenodo.14383283

***ஆய்வுச் சுருக்கம்***

*பழந்தமிழ் நாட்டின் வரலாற்று செய்திகள், மன்னர்களின் வீரம், கொடைத்திறம் போன்றவற்றையும் அக்கால மக்களின் கலைகள், நகர அமைப்பு முறைகள் மற்றும் இயற்கை குறித்த செய்திகளை எடுத்தியம்பும் ஒரு புவியியல் பெட்டகமாக பத்துப்பாட்டு உள்ளது. இவற்றுள் மதுரைக் காஞ்சியானது மிக நீண்ட அடிகளை கொண்ட நூலாக கருதப்படுகிறது. பெருபான்மையான பாடல் வரிகள் மதுரையின் சிறப்புகளையும் அங்கு நடக்கக்கூடிய நிகழ்வுகளையும் குறித்தும் விரிவாகக் கூறப்பட்டுளளது. பாண்டிய மன்னன் நெடுஞ்செழியன் மதுரை நகரினை சிறப்புடன் ஆட்சிப்புரிந்து வந்தார். அங்கு வாழ்ந்து வந்த மக்களின் வாழ்வியலை நிலம் சார் முறையில் விவரிப்பதே இவ்வாய்வாகும்.*

**முன்னுரை**

*சங்ககால மக்களின் வாழ்வியலை சித்திரம் போல பிரதிபலிக்கக் கூடியவை தொகையும் பாட்டும் ஆகும். அங்ஙனம் சிறந்து விளங்கக்கூடிய பத்துப்பாட்டினுள் எட்டாவது நூலாக மதுரைக் காஞ்சி. மதுரைக்காஞ்சி நூலானது மதுரையின் அழகினை மட்டும் கூறாமல் ஐந்திணைக்குரிய கருப்பொருட்களையும் எடுத்தியம்புகிறது. அத்தகைய கருப்பொருட்களுள் ஒன்று தொழில், மதுரைக்காஞ்சியில் ஐந்திணை மக்களின் தொழில்கள் குறித்து ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாக அமைகிறது.*

**திணை**

*திணை என்பதற்கு நிலம், குடி, ஒழுக்கம் எனப் பலவாறு பொருள் படும். இங்ஙனம் திணையானது நிலத்தினை மையமாகக் கொண்டு அமைக்கிறது. நிலத்தின் பிரிப்பு முறையானது,*

***நடுவண் ஐந்திணை நடுவணது ஒழியப்..***

***(தொ. பொ. 02 )***

*ஐந்திணையானது குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பவாகும் என்கிறார் தொல்காப்பியர்.*

*அகப்பொருள் விளக்கமானது,*

***குறிஞ்சி பாலை முல்லை மருதம்***
***நெய்தல் ஐந்திணைக் கெய்திய பெயரே***

***-(அக. வி. 06 )***

*ஏழு திணைகளுள் நிலப் பாகுபாடு ஏற்படுத்த முடியாத கைக்கிளையும், பெருந் திணையும் விடுத்து நிலம் வகுக்கப்படுகின்ற ஐந்து திணைகளுக்கான பெயரை கூறியுள்ளது.*

**ஐந்திணைக்குரிய பொருள்கள்**

*இவ்வுலக மனித வாழ்விற்கு இன்றியமையாத பொருட்களாக தொல்காப்பியர் உரைப்பது,*

***முதல் ,கரு , உரிப்பொருள் என்ற மூன்றே ..***

***-( தொ. பொ . 63)***

*முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்பனவாகும். இவற்றுள் முதல் பொருள் நிலம், பொழுதினை அடிப்படையாக கொண்டும், உரிப்பொருளானது நிமித்தங்களையும், சூழல்களையும் வைத்து அமைகிறது.*

**ஐந்திணைக்குரிய கருப்பொருட்கள்**

முதல் பொருளினை அடிப்படையாக வைத்து கருப்பொருள்கள் தோன்றினர். கருப்பொருட்களின் வகையானது,

***ஆரணங்கு உயர்ந்தோர் அல்லோர் புள் விலங்கு***
***ஊர் நீர் பூ மரம் உணா பறை யாழ் பண்***
***தொழில் எனக் கருஈர் எழுவகைத்து ஆகும்***

***-(அக. வி . 19 )***

என்கிறார் நாற்கவிராசர் நம்பி.

**மதுரைக்காஞ்சி - ஐவகை நிலத்தின் தொழில்கள்**

பதினேழு வகையான கருப்பொருள்களும் ஐந்து வகையான நிலத்தின் தன்மைக்கு ஏற்ப வேறுபாடுடையனவாக அமைந்ததுள்ளது. அந்நிலத்தில் வாழுக்கின்ற மக்கள் அவற்றிக்கேற்ப தொழில்களை மேற்கொண்டு வந்தனர்.

**குறிஞ்சி நில மக்களின் தொழில்**

குறிஞ்சி நிலத்தினை மலை சார்ந்த பகுதியாக வகைப்படுத்தினர். அங்கு பெருமளவில் மலைகளில் விளையும் பொருட்களை பயன்படுத்தி தொழில் செய்து வந்தனர். தொல்காப்பியத்தில்,

***ஐவனம் வித்தல் செறிகுரற்***
***பைந்தினை காத்தல் செந்தேன் அழித்தல் ..***

***-(அக. வி. 20)***

தினைப்புனம் காத்தல், தேன் எடுத்தல் போன்ற தொழில்களை குறிஞ்சி நில மக்கள் செய்துள்ளனர் என்பதை அகப்பொருள் விளக்கம் வழி அறியமுடிகிறது. இதனை மதுரைக்காஞ்சியில்

***நறுங்காழ் கொன்று கோட்டின் வித்திய***
***குறுங்கதிர்த் தோரை நெடுங்கால் ஐயவி***
***ஐவன வெண்ணெலொடு***

***(மது. கா. 286-288)***

அகில் மரங்கள், நிலத்தில் விளைந்த கதிர்கள், மூங்கில் விதைகள் போன்றவற்றை வேளாண்மை செய்தனர் என்றும்,

***தினை விளை சாரற் கிளிகடி பூசல்***

***-(மது. கா. 291)***

தினைகள் விளைக்கின்ற மலைப்பக்கங்களில் கிளிகளை விரட்டும் தினைப்புனம் காத்தல் தொழிலையும் செய்தனர் குறிஞ்சி நில மக்கள்.

**முல்லை நில மக்களின் தொழில்**

காடு நிறைந்த பகுதியினை முல்லை நிலமாக பாகுப்படுத்தினர் சங்ககால மக்கள். பெரும்பாணாற்றுப்படை,

***குறுஞ் சாட்டு உருளையொடு கலப்பை சார்த்தி..***

***(பெரு.188)***

கலப்பையை மூலக் கருவியாக வைத்து விவசாயத் தொழில் புரிந்தனர்.

***தொல்காப்பியர் முல்லைத் திணை மக்களின் தொழில் குறித்து***

***சாமை வரகு தரமுடன் வித்தல் -(அக. வி . 22)***

***சாமை வரகு போன்ற தானியங்களை உற்பத்தி செய்தும் வந்துள்ளனர்.***

***இதனை மாங்குடி மருதனார் தமது பாடலில்,***

***சிறுதினை கொய்ய கவ்வை கறுப்ப***
***கருங்கால் வரகின் இருங்குரல் புலர,***

***-(மது. கா. 271-272)***

சிறிய தினை கதிர்களையும், எள்ளின் இளங்காய்களையும், கரிய கதிர்கள் முற்றிய வரகுகளையும் விளைவிக்கின்றனர் ஆயர் குல மக்கள்.

**மருத நில மக்களின் தொழில்**

வயல்கள் சூழப்பட்ட பகுதி மருதம் எனப்பட்டது. நாற்கவிராசர் நம்பி மருத நில தொழிலானது

***வயல்களை கட்டல் ,அரிதல் கடாவிடல்***

***-( அக. வி . 23 )***

வரப்பு அமைத்தல், உழவு செய்தல் போன்றவையாகும்.

***நீர்த் தெவ்வும் நிரைத் தொழுவர்***
***பாடு சிலம்பு இசை ஏற்றத்***
***தோடு வழங்கும் அகல் ஆம்பியின்***
***கயன் அகைய வயல் நிறைக்கும்***
***மென் தொடை வன் கிழாஅர்,***
***அதரி கொள்பவர் பகடு பூண் தெள்மணி***
***இரும் புள் ஓப்பும் இசையே என்றும்***

***(மது. கா. 89-95)***

நீரினை தெளிகின்ற ஓசை, நீர் இறைக்கும் ஓசை, வயலை நீரினால் நிறைக்கும் ஓசை, எருதுகள் பூட்டுகின்ற ஓசை, பெரிய பறவைகளை விரட்டும் ஓசை என்பனவற்றின் மூலம் உழவுத் தொழில் சிறந்த தொழிலாக மருத நில மக்களிடையே போற்றப்பட்டது.

**நெய்தல் நில மக்களின் தொழில்**

*சங்ககால கட்டடங்களில் வாழ்ந்த மக்கள் நீரானலான இடத்தினை நெய்தல் நிலமாக பிரித்தனர். மீன் பிடி தொழிலனை*

***..... மீனுப்புப் படுத்தல்***
***உணங்கவை விற்றன்மீன்.. -(அக. வி . 24)***

*எனக் குறிப்பிடுகிறார்.*

*மதுரைக் காஞ்சியில்,*

***நிரை திமில் வேட்டுவர் கரைசேர் கம்பலை..***
***(மது. கா . 116)***

*கடலினுள் படகினை செலுத்தி மீனினை வேட்டையாடுபவர்களின் ஓசை கேட்கிறது என்பதன் வழி மீன் பிடி தொழில் நெய்தல் நிலத்தில் இருந்தது என்றும்,*

***இருங்கழிச் செறுவின் வெள்உப்புப் பகர்நரொடு***
***(மது. கா . 117)***

*வெள்ளை உப்பு விற்பவர்களின் ஓசையானது அங்கு பரவலாக ஒலிக்கிறது என்ற செய்தியின் பொருட்டு உப்பு விற்கும் தொழில் நெய்தலில் நடைப் பெற்றது என தெரிந்து கொள்ள முடிகிறது. மேலும்*

***பாதர் தந்த பல் வேறு கூலம் .. - (மது. கா . 317)***

*பிற நாடுகளில் இருந்து வந்து இங்கிருந்து கிடைக்கக்கூடிய நல்ல அணிகலங்களை எடுத்துச் செல்வர் என்பதன் மூலம் வணிகத் தொழில் இருந்தமையையும் உணரத்துகிறது.*

**பாலை நில மக்களின் தொழில்**

*குறிஞ்சி முல்லை நிலங்களில் மழை பொழியாமல் இருப்பின் அது திரிந்து பாலை நிலமாகும். இதனைஇளங்கோவடிகள்,*

***முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து..***
***(சிலம்பு - 64)***

*என்கிறார்.*

***சிலையுடைக் கையர் கவலை காப்ப***
***-(மது. கா .311 )***

*வில்லினைக் தங்கள் கையில் ஏந்தி ஆறலைகள்வர்கள் வராமல் பாலை நில இளைஞர்கள் பாதுகாப்பு தொழிலில் ஈடுப்பட்டு வந்தனர்.*

**முடிவுரை**

*மதுரை மாநகரின் வளங்களை எல்லாம் முழுமையாக எடுத்து கூறவதுடன், ஐந்திணையின் கருப்பொருட்கள் முதலியவற்றையும் மதுரைக் காஞ்சி எடுத்துரைக்கிறது. கருப்பொருட்களுள் ஒன்றானது தொழில். இவற்றின் வாயிலாக தொழிலின் முக்கியத்துவத்தையும், ஐவகை நில மக்கள் அவரவர்களின் நிலத்தின் தன்மைக்கு ஏற்ப தொழில் புரிந்து செழித்து வாழ்ந்து வந்தமையையும் புலனாகிறது.*

**துணைநூற்பட்டியல்**


1. *திரு கா. நா. கோவிந்தராச முதலியார் - தென்னிந்தியசைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகம் சென்னை*
2. *ச. திருஞானசம்பந்தம்- தொல்காப்பியம் பொருளதிகாரம் கதிர் பதிப்பகம், திருவையாறு.*
3. *பாக்கியமேரி, தமிழர் பண்பாடும் பயன்பாடும், அநிசனச்சிமிழப் பதிப்பகம், சென்னை*
4. *இரா. மோகன் (உரையாசிரியர்)- பத்துப்பாட்டு மூலமும் உரையும் (இரண்டாம் பகுதி), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை*